**செய்தி குறிப்பு எண்.111** **நாள்.23.12.2009**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

## தீக்கதிர் நாளிதழ் செய்திக்கு மறுப்பு

''காப்பீட்டுத் திட்டமும் கலங்க வைக்கும் சாவுகளும்'' என்ற தலைப்பில் 23.12.2009 நாளிட்ட தீக்கதிர் செய்தித் தாளில் கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

தமிழக அரசு தற்போது செயல்படுத்தி வரும் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. உயிர்காக்கும் நோய்க்காக சிகிச்சை தேவைப்படுவோர் அரசு மருத்துவமனைகளில் அதிக எண்ணிக்கையில் காத்திருக்கும் நிலை உள்ளது. அவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க வகை செய்ய வேண்டும் என்ற காரணத்தினால், தமிழ் நாட்டில் உள்ள தனியார் மருத்துவமனைகளையும் இத்திட்டத்தில் ஈடுபடுத்தி அனைத்து நோயாளிகளுக்கும் விரைவில் உயிர்காக்கும் உயர் சிகிச்சை அளிக்கும் வகையில் இக்காப்பீட்டுத் திட்டம் கொண்டுவரப்பட்டது என்றும், இத்திட்டத்தால் அரசு மருத்துவமனைகளும் ஆரம்ப சுகாதார நிலையங்களும் புறக்கணிக்கப்படமாட்டாது; மாறாக அவைகள் வலுப்படுத்தப்பட்டு வருகிறது என பலமுறை அரசு குறிப்பிட்டும் தொடர்ந்து தவறான செய்திகள் மக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

தமிழக அரசு, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. 2009—10—ஆம் ஆண்டிற்கு ரூபாய் 3,391 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு மருத்துவமனைகள் மேம்பாடு அடைந்து, சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. தற்பொழுது நடைமுறைபடுத்தப்பட்டு வரும் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் ஏழை மக்கள் விரைவில் சிகிச்சை பெறுவதற்காக ஒரு கூடுதல் வசதியை (supplementary facility) உருவாக்கித் தந்துள்ளது. இதன் மூலம், ஏழைகளும், வசதி படைத்தவர்களுக்கு இணையாக பெரிய தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிறப்பு சிகிச்சை பெறும் நிலையை அரசு ஏற்படுத்தி உள்ளது. அரசு மருத்துவமனைகளை சீரமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டில் ரூபாய் 1,000 கோடிக்கும் மேல் கட்டடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. ரூபாய் 500 கோடிக்கும் மேல் மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு வரும் புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வருகிறது. தனியார் மருத்துவமனைகளில் நிகழும் பிரசவங்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து ஆரம்ப சுகாதார

நிலையங்களில் நிகழும் பிரசவங்களின் எண்ணிக்கை மூன்று மடங்குக்கும் மேலாக உயர்ந்து வருகிறது. 2005–06–ஆம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிகழ்ந்த பிரசவங்களின் எண்ணிக்கை 81,190. இந்த எண்ணிக்கை 2008–09–ஆம் ஆண்டில் 2,59,133 ஆக உயர்ந்துள்ளது. கடந்த எட்டு மாதங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிகழ்ந்த பிரசவங்களின் எண்ணிக்கை 2,00,267 ஆகும். இந்திய அளவில் தமிழ் நாட்டில் தான் ஆரம்ப சுகாதார நிலையங்கள் சிறப்பாக செயல்படுகின்றன என மைய அரசு பாராட்டி உள்ளது. அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்புகள் வலுப்படுத்தப்படுகின்றன. காலியாக உள்ள மருத்துவர் மற்றும் மருத்துவம் சாரா பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. கடந்த மூன்றரை ஆண்டுகளில் 6,009 மருத்துவர்களும், 7,042 செவிலியர்களும் புதியதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மற்ற மருத்துவம் சார்ந்த பணியிடங்களும் நிரப்பப்பட்டு வருகின்றன.

தமிழக அரசு அலுவலர்களின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் முதல் 4 மாதங்களில் வழங்கப்பட்ட காப்பீட்டு தொகை ரூபாய் 24.44 கோடி மட்டுமே. அதன் பின்னர் 14 மாதங்களில் ரூபாய் 170.77 கோடியாகி மொத்தம் ரூபாய் 195.21 கோடியாகியுள்ளது. ஆனால், தமிழக அரசு 10.6.2010 வரையிலான இரண்டாண்டு காலத்திற்கு செலுத்தியுள்ள பிரிமிய தொகையோ ரூபாய் 121.68 கோடி மட்டுமே. மேலும், அதே திட்டத்தில் இந்த வருடம் முதல் 6 மாதங்களிலேயே ரூபாய் 66.79 கோடி காப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது. கலைஞர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இப்பொழுது நாள் ஒன்றுக்கு 300–க்கும் மேற்பட்ட பயனாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இது வரை இந்தத் திட்டத்தில் 20,447 நபர்களுக்கு அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை அரசு மருத்துவமனையில் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக 11.12.2009 அன்று முத்துராஜா என்பவர் சேர்க்கப்பட்டார் அவருக்கு பணியிலிருந்த மருத்துவர் உரிய சிகிச்சை அளித்துள்ளார். சிகிச்சையில் முன்னேற்றம் காணப்பட்டு நலமாக இருந்தார். இவருடைய உறவினர் திரு எம். பார்த்திபன் கேட்டுக்கொண்டதின் பேரின் 14.12.2009 அன்று மருத்துவமனையிலிருந்து அனுப்பப்பட்டார். பின்னர் அவர் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் 17.12.2009 அன்று அனுமதிக்கப்பட்டு அங்கு அவருக்கு டெங்கு காய்ச்சல் உறுதி செய்யப்பட்டு 21.12.2009 அன்று இறந்துள்ளார். இதே போல் சிவகங்கையில் நல்ல பாம்பு கடித்தாக காலீஸ்வரி என்ற 17 வயது மாணவி 02.11.2009 அன்று சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்தார். அவருக்கு உடனடியாக பாம்புக்கடிக்கான மருந்து வழங்கப்பட்டது. ஆனால் இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு சிகிச்சைப் பலனின்றி அவர் இறந்துவிட்டார். மதுரை அரசு மருத்துவமனையில் பாம்புக்கடி சிகிச்சைக்காக 20.12.2009 அன்று ரமேஷ் என்ற 18 வயது மாணவர் சேர்க்கப்பட்டு அவருக்கு

உடனடியாக பாம்புக்கடி மருந்து கொடுக்கப்பட்டது, ஆனால் சிகிச்சை பலனின்றி அம்மாணவர் இறந்துவிட்டார்.

எல்லா மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நாய்க்கடி மருந்து மற்றும் பாம்புக்கடி மருந்து போதுமான அளவு உள்ளது. தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழகம் இந்த மருந்துகளை கொள்முதல் செய்து விநியோகம் செய்து வருகின்றது. எல்லா மருந்துக் கிடங்குகளிலும் நாய்க்கடிக்கான மருந்து எட்டு மாதங்களுக்கும், பாம்புக்கடிக்கான மருந்து நான்கு மாதங்களுக்கும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. எல்லா மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இந்த மருந்துகளின் கையிருப்பு, மருத்துவப்பணிகள் கழகத்தால் ஆன்லைன் மூலம் கண்காணிக்கப்படுகிறது. எனவே நாய்க்கடி மருந்து மற்றும் பாம்புக்கடி மருந்து போதுமான அளவில் இருப்பு இல்லை என்று கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது தவறான தகவலாகும்.

இந்த அரசு ஏழை எளிய மக்கள் விபத்து மற்றும் அவசர காலங்களில் உரிய மருத்துவச் சிகிச்சை உடனடியாக கிடைக்க வேண்டும் என்பதற்காக அவசர ஆம்புலன்ஸ்–108 என்ற இலவச சேவைத் திட்டத்தை 15.09.2008 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை விபத்து, பாம்புக்கடி போன்றவற்றால் பாதிக்கப்பட்ட 12,499 நபர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டதால் அவர்களின் உயிர்கள் காப்பற்றப்பட்டுள்ளன. கலைஞர் காப்பீட்டுத் திட்டம் கொண்டுவரப்பட்டதால் இதுவரை 20,447 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு அவர்களின் உயிர்களும் காப்பற்றப்பட்டுள்ளன.

அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கிராம மற்றும் நகர்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு சிறப்பாக மருத்துவச் சேவைகளை வழங்கி வருகிறது. இந்த சேவையை மேலும் வலுப்படுத்த இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மக்களை தனியார் மருத்துவமனைகள் பக்கம் தள்ளிவிடுவதற்கான ஏற்பாடு என்று கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது உண்மைக்கு மாறான தகவலாகும். மக்களை திசை திருப்புவதற்காகவே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

* * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**